RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 137 | மே.25 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# கோவை சிறுமியின் பெற்றோரிடம் தொலைபேசி மூலம் முதல்வர் விஜய் ஆறுதல் ரூ.7 லட்சம் நிதியுதவி அளிப்பு

மேட்டூர்: மே.25-

கோவையில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி கொலை செய்யப்பட்ட சிறுமியின் குடும்பத்தினரிடம் தொலைபேசி மூலம் பேசி தமிழக முதல்வர் விஜய் ஆறுதல் தெரிவித்தார்.

கோவை மாவட்டம் சூலூர் அருகே 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 2 பேரை போலீஸார் கைது செய்தனர். கோவை அரசு மருத்துவமனையில் சிறுமியின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, சொந்த ஊரான மேட்டூர் அருகே கொளத்தூர் உக்கம்பருத்தி காடு கிராமத்தில் உள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்நிலையில் போக்குவரத்துத் துறை அமைச்சர் தமிழன் பார்த்திபன் மற்றும் பிற்படுத்தபட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் ஆகியோர் சிறுமியின் பெற்றோரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.



தொடர்ந்து, சிறுமியின் குடும்பத்தினருக்கு ரூ 7 லட்சத்துக்கான காசோலையை வழங்கினர். சிறுமியின் பெற்றோர் மற்றும் பாட்டியை வீட்டின் உள்ளறைக்கு அழைத்துச் சென்று பேசினர். அப்போது, தமிழக முதல்வர் விஜய் சிறுமியின் தந்தை மற்றும் பாட்டியிடம் தொலைபேசி மூலமாக பேசி ஆறுதல் தெரிவித்தார். அப்போது, மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாவட்ட எஸ்.பி கவுதம் கோயல் உடனிருந்தனர்.

சிறுமியின் தந்தை மற்றும் பாட்டி நிருபர்களிடம் கூறியதாவது: "இந்த சம்பவம் குறித்து கேட்டதும் மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். சிறுமியை கொலை செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க போலீஸாரிடம் தெரிவித்துள்ளேன். உங்களுக்கு வீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று முதல்வர் விஜய் தெரிவித்ததாக கூறினர்.

பின்னர், போக்குவரத்துறை அமைச்சர் நிருபர்களிடம் கூறியதாவது: இது மிகப்பெரிய இழப்பு. இது தொடர்பாக முதல்வர் வருத்தத்தையும், அறிக்கையும் வெளியிட்டுள்ளார். இது போன்ற எந்த ஒரு சம்பவமும் இனி தமிழ்நாட்டில் நடக்கக் கூடாது என இரண்டு பேரை போலீசார் கைது செய்துள்ளனர். வழக்கு விரைந்து முடித்து கடுமையான தண்டனை வழங்கப்படும். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு பொது நிவாரண நிதியின் கீழ் ரூ 7 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. என்றார்.

மத்தியமாநில அமைச்சர்கள் நேருக்கு நேர் சந்திப்பு: கோவையில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினரை சந்தித்து பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் ஆறுதல் தெரிவித்து விட்டு வந்தனர். அப்போது, அமைச்சர்கள் தமிழன் பார்த்திபன் மற்றும் சம்பத்குமார் வெளியே காத்திருந்தனர்.

பின்னர், பாஜக தலைவர் மற்றும் மத்திய அமைச்சர் வெளியே வரும் போது தமிழக அமைச்சர்களை நேருக்கு நேராக சந்தித்து பேசி கொண்டனர். அப்போது, தமிழக அமைச்சர்கள் தங்களை அறிமுகப்படுத்தி கொண்டு, கட்சி நிர்வாகிகளையும் அறிமுகப்படுத்தினர். தொடர்ந்து, சிறுமியின் குடும்பத்தினருக்கு வீடு இல்லை, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். அதற்கு, நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தமிழன் பார்த்திபன் தெரிவித்தார்.

## "முஸ்லிம்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிப்படையாக எழுப்ப வேண்டும்": ராகுல் காந்தி

புதுடெல்லி: மே.25-

தாங்கள் எதிர் கொள்ளும் சமூக பிரச்சினைகளை முஸ் லிம்கள் வெளிப்படையாக எழுப்ப வேண்டும் என்று ராகுல் காந்தி அறிவுறுத்தியுள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிறுபான்மைத் தலைவர்கள் கூட்டத்தில் அக்கட்சியின் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி பேசினார். அப்போது அவர் பேசியது குறித்து காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகையில், "கூட்டத்தில் பேசிய தலைவர் ராகுல், எந்தவொரு முஸ்லிமும் அநீதிக்கு ஆளானால், அதை எதிர்த்து குரல் கொடுப்பது அவசியம் என தெரிவித்தார். ஒரு சிறுபான்மைக்



குழுவின் உறுப்பினராக மட்டுமல்லாமல், தான் ஒரு 'முஸ்லிம்' என்ற வகையிலும் ஒருவர் தனது குரலை எழுப்ப வேண்டும் என ராகுல் வலியுறுத்தினார்.

இதேபோல், தலித்துகள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பொதுப் பிரிவினர் பற்றியும் ராகுல் கூட்டத்தில் பேசினார். தங்கள் மீது தாக்குதல்கள் நடந்தால், அந்தக் குறிப்பிட்ட சமூகத்தைத் தெளிவாக அடையாளம் காட்டி அந்தப் பிரச்சினை எழுப்பப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சமீப காலங்களாக பொதுமக்கள் இடையே, 'முஸ்லிம்' என்று வெளிப்படையாகக் கூறுவதற்குப் பதிலாக 'சிறுபான்மையினர்' என்ற சொல் பயன்படுத்துகிறது என்றும், சிறுபான்மை யினரை 'முஸ்லிம்' எனக் குறிப்பிட்டு அழைக்க கட்சி யினர் தயங்கக்கூடாது என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டார்" என தெரி வித்தன.

கடந்த 2014ல் பாஜக தலைமையிலான ஆட்சிக்கு பிரதமராக நரேந்திரமோடி வந்திலிருந்து சிறுபான்மை யினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாகக் கருதப்படுகிறது. இதை அரசியலாக்கும் பொருட்டு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இக்கூட்டத்தை நடத்தியதாக கூறப்படுகிறது.

## 11, 12ம் வகுப்புகளுக்கும் மதிய உணவு திட்டம் தெலங்கானா அமைச்சரவை ஒப்புதல்

சென்னை, மே.25-

தெலங்கானாவில் உள்ள அரசுப்பள்ளிகளில் (ஜூனியர் கல்லூரிகள்) 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்த அம்மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தெலங்கானா மாநில அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் ரேவந்த் ரெட்டி தலைமையில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது. இதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் பொங்குலேட்டி சீனிவாச ரெட்டி, "காங்கிரஸ் அரசு முதல் கட்டமாக சுமார் ரூ. 22,500 கோடி செலவில் 4.50 லட்சம் வீடுகளுக்கு ஒப்புதல் அளித்திருந்தது. தற்போது ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் 2,000 வீடுகள் வீதம் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஹைதராபாத் பெருநகர பகுதியில் உள்ள 24 சட்டப்பேரவை தொகுதிகளில், குறைந்த வருவாய் பிரிவினருக்காக ஒரு லட்சம் வீடுகளைக் கட்ட அமைச்சரவை முடிவு செய்துள்ளது. மேலும், மாநிலத்தில் உள்ள அனைத்து ஜூனியர் கல்லூரிகளிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றக் (WEF) கூட்டத்திற்கு முதல்வர் ரேவந்த் ரெட்டி சென்றிருந்தபோது வெளியிட்ட, 'அடுத்த தலைமுறை உயிரியல் அறிவியல் கொள்கை 2026-30' (Next-Generation Life Sciences Policy) திட்டத்திற்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான முதலீட்டையும், ஐந்து லட்சம் வேலைவாய்ப்புகளையும் ஈர்ப்பதை இக்கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மின் விநியோகம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, மத்திய அரசின் 'RDSS' (மேம்படுத்தப்பட்ட மின் விநியோகத் துறைத் திட்டம்) திட்டத்தில் இணைவதற்கான மாநில மின் விநியோக நிறுவனங்களின் (DISCOM) முன்மொழிவுகளுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 'பாலமூரு ரங்கா ரெட்டி' நீர்ப்பாசனத் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்துதல் மற்றும் பிற பணிகளுக்காக ரூ. 587 கோடியை ஒதுக்கீடு செய்யவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது" என்று கூறினார்.

## தவெக தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு ராமதாஸ் வரவேற்பு புதிய அரசியல் பண்பாட்டை உருவாக்க வலியுறுத்தல்

சென்னை: மே.25-

தமிழகத்தில் அமைந்துள்ள கூட்டணி அமைச்சரவையை வரவேற்பதாகவும், கூட்டணி ஆட்சி தமிழக அரசியலில் புதிய அரசியல் பண்பாட்டை உருவாக்க வேண்டும் என்றும் பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்ற அரசியல் நிலைப்பாட்டை பல ஆண்டுகளுக்கு முன்பே முன்வைத்த கட்சி பாமக. அதிகாரம் ஒரே கட்சியிடம் மட்டுமே குவியாமல், பல்வேறு அரசியல் சிந்தனைகளுக்கும் சமூகப் பிரதிநிதித்துவத்துக்கும் இடமளிக்கும் ஆட்சி முறைதான் ஜனநாயகத்தின் உண்மையான வடிவம் என்று பாமக தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

தற்போது தமிழக மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பின் அடிப்படையில் மாநிலத்தில் கூட்டணி ஆட்சி அமைந்துள்ளது. இந்த கூட்டணி அரசில் இடம்பெற்றுள்ள கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சரவையில் உரிய பங்கு வழங்கப்பட்டிருப்பது



வரவேற்கத்தக்க அரசியல் முன்னேற்றமாகும். இது தமிழக அரசியலில் புதிய அரசியல் பண்பாட்டை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டணிக்கு தலைமை வகிக்கும் தவெக, கூட்டணிக் கட்சிகளின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் மதித்து செயல்படுவது ஜனநாயகத்திற்கு வலுசேர்க்கும். ஆட்சி என்பது ஒரே கட்சியின் விருப்பப்படி நடைபெறுவது அல்ல; கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளின் அனுபவமும், கருத்தும், மக்கள் நலப் பார்வையும் இணைந்தால் மட்டுமே நல்லாட்சியை வழங்க முடியும்.

கூட்டணிக் கட்சிகளின் பங்களிப்பு அமைச்சரவைப் பதவிகளில் மட்டும் முடங்கிவிடக் கூடாது. அரசின் கொள்கைகள் வகுப்பதிலும், மக்கள் நலத் திட்டங்களை திட்டமிடுவதிலும், நிர்வாக குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதிலும், மாற்று ஆலோசனைகளை வழங்குவதிலும் அவர்களின் பங்கு முக்கியமானதாக இருக்க வேண்டும். அதுவே கூட்டணி ஆட்சியின் உண்மையான நோக்கமாகும்.

கூட்டணி ஆட்சி என்பது அதிகாரப் பகிர்வு மட்டுமல்ல; அது பொறுப்புப் பகிர்வும் ஆகும். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒருமித்த அணுகுமுறையுடன் செயல்பட வேண்டும். தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றுதல், சமூக நீதி, கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, விவசாயம் உள்ளிட்ட துறைகளில் மக்கள் நல முன்னேற்றங்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும்.

தமிழகத்தின் தற்போதைய கூட்டணி அமைச்சரவை ஜனநாயகத்திற்கும், அரசியல் நாகரிகத்திற்கும் நல்ல முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். கூட்டணி அரசின் இந்த தொடக்கம் மக்கள் நலனுக்கான சிறந்த ஆட்சியாக மலர வேண்டும் என்பதோடு, தமிழகத்தின் வளர்ச்சிக்கும் அரசியல் நிலைத்தன்மைக்கும் வழிவகுக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்" என தெரிவித்துள்ளார்.

## "மேகேதாட்டு திட்டம் குறித்த டி.கே.சிவகுமாரின் பேச்சை முதல்வர் விஜய் கண்டிக்க வேண்டும்": சீமான்

சென்னை: மே.25-

"மேகேதாட்டு திட்டத்தை எதிர்க்க தமிழ்நாட்டுக்கு எந்த உரிமையும் இல்லை எனப் பேசியிருக்கும் கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமாரின் பேச்சை முதல்வர் விஜய் கண்டித்து, மேகேதாட்டுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சிக்கு தமிழ்நாட்டு அரசின் சார்பாக எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டும்" என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'காவிரியாற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணைகட்டும் கர்நாடக அரசின் திட்டத்தை எதிர்க்க தமிழ்நாட்டுக்கு எந்த உரிமையும் இல்லை எனப் பேசியிருக்கும் கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமாரின் பேச்சு அடாவடித்தனத்தின் உச்சம்; காவிரி நதிநீர் உரிமையை



முழுமையாகத் தங்களுக்கென சொந்தமாக்கத் துடிக்கும் மோசடித்தனத்தின் வெளிப்பாடு.

கன்னடம் எனும் மொழி பிறப்பதற்கும், கர்நாடகா எனும் மாநிலம் பிறப்பதற்கும் முன்பிருந்தே, காவிரிக்கும், தமிழ்நாட்டுக்கும் வரலாற்றுவழி உயிர்த்தொடர்பு இருக்கிறது. அதனை முற்றாக அறுத்து, உலக நதிநீர் பங்கீட்டு விதிகளுக்கு நேர்மாறாக, காவிரி நதிநீர் உரிமையை கர்நாடகத்துக்கு மட்டுமானதாக உரிமை கொண்டாடத் துடிக்கும் சூழ்ச்சியின் வெளிப்பாடே மேகேதாட்டுவில் அணைகட்டும் வஞ்சகச்செயல். அதனை தமிழர்கள் நாங்கள் தட்டிக் கேட்காது, வேறு யார் கேட்பார்? காவிரியில் தமிழர்கள் எங்களுக்கில்லாத உரிமை வேறு யாருக்கு இருக்கிறது?

காவிரி நதிநீர் உரிமை என்ன கர்நாடகத்துக்கு மட்டுமான சொத்தா? ஒரு ஆற்றின் தலைப்பகுதியில் வாழ்பவர்களைவிட கடைமடைப் பகுதியில் வாழ்பவர்களுக்கே ஆற்றின் மீது அதிக உரிமை எனும் நதிநீர் பங்கீட்டு விதிகளின்படி, காவிரியின் மீது கர்நாடகத்தைவிட தமிழ்நாட்டுக்குத்தான் அதிக உரிமை இருக்கிறது. அப்படி யிருக்கையில், டி.கே.சிவகுமாரின் பேச்சு ஆணவத்தின் வெளிப்பாடு. அதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஆகவே, கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமாரின் ஆணவப்பேச்சை முதல்வர் விஜய் கண்டித்து, மேகதாதுவில் அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சிக்கு தமிழ்நாட்டு அரசின் சார்பாக எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.' எனத் தெரிவித்துள்ளார்.

## மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு பத்திரிகையாளர் சந்திப்பு



மாதவரம், மே 25-
மாதவரம் தொகுதிக் குட்பட்ட செங்குன்றம் சுற்றுவட்டார பகுதிகளான செங்குன்றம், புழல் ஒன்றியம், சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர், தீர்த்தக்கிரியம்பட்டு, விளாங்காடுபாக்கம், கிராண்ட்லைன், வடகரை, அழிஞ்சிவாக்கம், நல்லூர், சோழவரம், புழல், காவாங்கரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தொடர் மின்தடை ஏற்படுகிறது.இதுகுறித்து மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு செங் குன்றம் சுற்றுவட்டார மின்வாரிய அதி காரிகள், அலுவலர்களை அழைத்து தொடர் மின்தடைக்கு என்னென்ன காரணங்கள்? இதை சரி செய்வதற்கு என்ன செய்ய வேண்டுமென்றும் ஆலோசித்தார்.பின்னர், தொடர் மின்தடை தொடர் பாக பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்பொழுது அவர் கூறுகையில், தொடர் மின்வெட்டு பல்வேறு பகுதிகளில் நிலவி வந்தாலும், இந்தப் பிரச்னையை உடனடியாக சரி செய்ய வேண்டுமென்பதற்காக மின்வாரிய அதிகாரிகள் அலுவலர்களிடம் ஆலோசித்தேன். அப்பொழுது அவர்கள் ஒரு சில பிரச்னைகளை கூறினர். அதில் முக்கியமானது ஆள் பற்றாக்குறை என்பதும், உடனடியாக சில பொருள்கள் தேவைப்படுவதையும் கூறினர். அவர்களின் கோரிக்கையை ஏற்று, தொடர் மின்தடை இருக்கும் பகுதிகளில் தமிழக வெற்றிக் கழகத்தின் தோழர்களை அனுப்பி மின்வாரிய ஊழியர்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதுடன் மின்தடையை சீராக்கி பொதுமக்களுக்கு ஒத்துழைப்பு தரச் சொல்லி இருக்கின்றேன். அதே போல் மின்வாரிய ஊழியர்கள் அலைப்பேசி அழைப்புகளை எடுப்பதில்லை என பொதுமக்க ளிடமிருந்து புகார் வந்தவண்ணமிருந்தது. அவர்களோடு உரையாடும் பொழுது, மின்தடை ஏற்பட்டிருக்கும் பொழுது அதை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது அலைபேசி அழைப்புகளை எடுக்க முடிவதில்லை என்று கூறியதால், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பொதுமக்களின் குறைகளை உடனடியாக சரி செய்வதற்காக உங்கள் குரல் எனும் திட்டத்தின் கீழ் 9600832026 எனும் அழைப்பேசி எண்ணுக்கு மின்தடை தொடர்பாக புகார் கூறினால் உடனடியாக சரி செய்வதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றார். அதே போல் பத்திரிகையாளர்களாகிய நீங்கள் மக்கள் பிரச்னை எதுவாக இருந்தாலும் என் கவனத்திற்கு கொண்டு வாருங்கள். அதை உடனடியாக சரி செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன் என்றார்.

## திருவள்ளூரில் தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகள் சங்கத் தேர்தல்



திருவள்ளூர்மே,25-
தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகிகள் தேர்தல் திருவள்ளூர் ஜே.என். சாலையில் அமைந்துள்ள மாவட்ட சங்க அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது இந்த தேர்தலை ஆணையர் ராசக்குட்டி தேர்தல் துணை ஆணையர் கபிர்லால் மற்றும் சிறப்பு தேர்தல் மேற்பார்வையாளர்கள் மாநிலத் தலைவர் மதுரம் அகில இந்திய தலைவர் கணேசன் தலைமையில் தேர்தல் நடைபெற்றதுதிருவள்ளூர் மாவட்டத்தின் மாவட்ட நிர்வாகிகள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டன மாவட்ட தலைவர் சண்முகம் மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் மாவட்ட பொருளாளர் ஜெயபிரகாஷ் மாவட்ட துணை தலைவர்கள் சாந்தம் , முரளிதாஸ், ராஜ்குமார், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ராஜேஷ், விஜய், மாவட்ட தணிக்கையாளர் மணி மாவட்ட தலைமை நிலை செயலாளர் தெய்வசிகாமணி மாவட்ட அமைப்பு செயலாளர்கள் நாகராஜன், ஜெய் கிருஷ்ணன் மாவட்ட பிரச்சார செயலாளர் வினோத்குமார் மாவட்ட மகளிர் அணி செயலாளர் உமா மகேஸ்வரி,மாநில செயற்குழு உறுப்பினர்கள் சண்முகம் ஜெய்பிரகாஷ் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்,சங்க தேர்தலில் வெற்றி பெற்ற அனைவருக்கும் அரசு அலுவலர்கள் சமூக ஆர்வலர்கள் பத்திரிக்கை நண்பர்கள் அனைவரும் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்



■ நீலகிரி மாவட்ட கோத்தகிரி ஒன்றிய பேரூர் பகுதிகளில் குன்னூர் எம்.எல்.ஏ., கே.எம். ராஜூ நன்றி கூறினார்.நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில், குன்னூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ கோத்தகிரி ஒன்றியம் மற்றும் கோத்தகிரி பேரூர் கழக பகுதிகளில் கழக நிர்வாகிகளுடன் சென்று வாக்காளித்து வெற்றிபெறசெய்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.



## சின்னமனூர் அருகே உயர் மின் அழுத்த கம்பியின் மின்சாரம் பாய்ந்து தற்காலிக மின்சார ஊழியர் பலி

தேனி : மே,25-
தேனி மாவட்டம் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட,வேப்பம்பட்டியில் இருந்து சீலையம்பட்டி செல்லும் பிரதான சாலையின் இருபுறமும். அமைந்து தனியார் சோலார் சிஸ்டம் அருகே காமாட்சிபுரம் துணை மின் நிலையத்திற்கு உட்பட்ட தற்காலிக பணியாளர் ராமமூர்த்தி (55) என்பவர் தனியாருக்கு சொந்தமான சோலாருக்கு செல்லும் உயர்மின் அழுத்த கம்பியின் மூலம் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு இதனால் ஆத்திரம் அடைந்த உறவினர்கள் தனியார் சோலார் உரிமையாளரை கண்டித்து உயிரிழந்தவரின் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர் இதன் காரணமாக வேப்பம்பட்டி to சின்னமனூர் செல்லும் பிரதான சாலையில் 2 மணி நேரமாக போக்குவரத்து பாதிப்பு மேலும் இச்சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த ஓடைப்பட்டி போலீஸ் விபத்து குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## மாலைதந்தி செய்தி எதிரொலி

### செங்குன்றம் பாலவாயல் சிக்னல் சர்வீஸ் சாலை சீரமைப்பு

### போக்குவரத்துத்துறை அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை. பொதுமக்கள் நன்றி

மாதவரம், மே.,25-
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் பாலவாயல் சிக்னல் கிணற்று கடை உணவகம் அருகே உள்ள சர்வீஸ் சாலையில் நீண்ட வருடங்களாக சாலை ஓரமாக லாரிகள், கார்கள் மற்றும் வேன்களை பழுதுபார்பதற்காக பொதுமக்கள் பயன்படுத்தும் சர்வீஸ் சாலையின் ஒருபுரமாக நிறுத்திவைத்து காலை மற்றும் மாலை நேரங்களில் வாகனங்களை பழுதுபார்த்து வந்தனர். இதனால் போக்குவரத்து நெரிச்சல் உள்ளிட்ட பல்வேறு இன்னல்களை பொதுமக்கள் சந்தித்தனர். இதுகுறித்து உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு மாதவரம் சட்டமன்ற உறுப்பினர், போக்குவரத்துத்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்கு மாலைதந்தி நாளிதழ் வாயிலாக கோரிக்கை வைத்தனர். பின்னர் மாலைதந்தி எதிரொலியாக பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று செங்குன்றம் பாலவாயல் சர்வீஸ் சாலையின் ஒருபுரமாக நிறுத்திவைத்துள்ள லாரிகள், கார்கள் மற்றும் வேன்களை போக்குவத்துத்துறை அதிகாரிகள் உடனடியாக அப்புரப்படுத்தி எச்சரிக்கை விடுத்தனர். மேலும் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட போக்குவரத்துத்துறை அதிகாரிகளுக்கும் மற்றும் மாலைதந்தி நாளிதழ்க்கும் பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.





## நீலகிரி மாவட்ட. சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துறையின் விழிப்புணர்வு முகாம்

கோத்தகிரி மே,25-
நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆனைக்கிணங்க, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை காவல் கண்காணிப்ப ாளர் வி.சுந்தரேசன் தலைமையில் குன்னூர் காவல் உட்கோட்டம், கோத்தகிரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பழங்குடியினருக்கான தொண்டுநிறுவனமான NAVA அலுவலகத்தில், பழங்குடியினர் பற்றிய ஆய்விற்காக வந்திருந்த சென்னை பல்கலைக் கழக மாணவ,மாணவியர் மத்தியில் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது .இம்முகாமில் நீலகிரி மாவட்ட SJHR பிரிவு துணைகாவல் கண்காணிப்பாளர் வி.சுந்தரேசன் கலந்து கொண்டு SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டம், POCSO சட்டம், Cyber crime, ,மாணவ மாணவியருக்கான அரசின் கல்வி,வேலைவாய்ப்பு திட்டங்கள் குறித்து எடுத்து கூறினார் .



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் கோடை வெயிலின் தாக்கத்தில் இருந்து பொது மக்களை காக்கும் விதமாக தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தாம்பரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தாம்பரம் மாநகர செயலாளருமான எஸ்.ஆர். ராஜா அவர்களின் அறிவுறுத்தலின் படி தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டல குழு தலைவரும், பகுதி கழக செயலாளருமான டி.காமராஜ் அவர்களின் தலைமையில் தாம்பரம் மாநகராட்சி சண்முகம் சாலையில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தலில் 46வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் ரமணி ஆதிமூலம் அவர்களின் ஏற்பாட்டில் தொடர்ந்து 10வது நாட்களாக பொது மக்களுக்கு நீர் மோர் லெமன் ஜீஸ் மற்றும் பாதாம் ஜீஸ் வெள்ளரி பிஞ்சு, தர்பூசணி பழங்கள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




■ தேனி மாவட்டம் பெரியகுளம், மற்றும் ஆண்டிபட்டி, வட்டங்களில் உள்ள வைகை அணை உபகோட்டம், வைகை அணை கட்டுப்பாட்டில் உள்ள ஆண்டிபட்டி வட்டத்தில் 3, பெரியகுளம் வட்டத்தில் 3, ஆக மொத்தம் 6 அரசு புறம்போக்கு வைகை அணை நீர்த்தேக்கத்தில் விவசாய நிலங்களுக்கு தேவைப்படும் களிமண் (Clay) மற்றும் வண்டல் மண் (Silt) ஆகியவற்றை விவசாயிகள் மற்றும் மண்பாண்ட தொழிலாளர்கள் இலவசமாக எடுத்துக் கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது (அரசாணை எண்.14, இயற்கை வளங்கள் (எம்.எம்.சி.1) துறை, நாள்:12.06.2024 ன்படி தேனி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீட்டு எண்.10. நாள்:12.05.2026) மண்பாண்ட பயன்பாட்டிற்காக களிமண் (Clay) எடுக்க வரப்பெறும் விண்ணப்பங்களில் உண்மைத்தன்மை குறித்து சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் சான்று, இருப்பிடச்சான்று ஆகியன சரிபார்த்து, வைகை அணை நீர்த்தேக்கத்தில் இலவசமாக எடுத்துக் கொள்ள tnesevai.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.

## குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் இசேவை பிரிவில் இயங்கும் ஆதார் சேவை மையத்தினை அலுவலகத்தில் முன்பு இயங்கி வந்த பழைய இடத்திற்கு மாற்ற பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை



குன்னூர் மே,25-
நீலகிரி மாவட்டம் குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் இசேவை மைய பிரிவில் இயங்கி வரும் ஆதார் சேவை மையத்தினை அதே அலுவலகத்தி முன்பு இயங்கி வந்த இடத்திற்கு மாற்ற வேண்டும் என பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.குன்னூர் சார் அலுவலகத்தி ற்குதினந்தோறும்பொது மக்கள் இருப்பிட சான்று, வருமான சான்று உட்பட பல சான்றிதழ்கள் விண்ணப்பிக்கவும் சான்றிதழ்கள் பெறுவதற்கும், இசேவை பிரிவ.வு அலுவலகத்திற்கு வரும் நிலையில் இந்த அலுவலகத்தில் செயல்பட்டு வந்தஆதார் சேவை மையம் அங்கிருந்து இசேவை மையத்திற்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. ஆதார் அட்டை பொது மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் இந்த பகுதியில் இசேவை மையத்திற்கு வரும் பொது மக்கள் மற்றும் ஆதார் சேவை விண்ணப்பிக்க வரும் பொது மக்கள் என கூட்டம் அதிகமாக உள்ள நிலையில் இந்த பகுதியில் வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள்,, குழந்தைகள், மற்றும் தாய்மார்கள் உட்பட அனைத்து தரப்பினரும் கூட்ட நெரிசலில் நின்றும் உட்கார இடமின்றியும், வெகு நேரம் காத்திருக்கும் சூழ்நிலையால் அனைத்து தரப்பினருக்கும் மன உளைச்சல் ஏற்படும் நிலை.ஆதார் நிலையின் முக்கியத்துவம் அறிந்தும், ஜூன் மாதம் பள்ளிகள் கல்லூரிகள் திறக்கபடவுள்ள நிலையில், இந்த அலுவலகத்தில் ஆதார்கார்டு மற்றும் வருமான சான்று, இருப்பிட சான்று, உட்பட சான்றிதழ்கள் விண்ணபிக்க பொது மக்கள் அதிகம் வர இருக்கும் நிலையில் அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கபடாமல் இருக்கவும் ஆதார்கார்டு மற்றும் சான்றிதழ்கள் விண்ணபிக்க வரும் அனைத்து தரப்பினரும் பாதிப்புகளை மையமாக எண்ணி குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் இசேவை மைய பிரிவில் இயங்கி வரும் ஆதார் மையத்தினை மீண்டும் அதே அலு வலகத்தில் பழைய இடத்திற்கு மாற்ற வேண்டும் என்பதே பொது மக்கள் சமூக ஆர்வலர்களின் கோரிக்கை



## செங்குன்றம் பேரூராட்சியில் மாதவரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனம் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்

மாதவரம், மே,25-

மாதவரம் சட்டமன்ற தொகுதி சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பின ருமான எஸ்.சுதர்சனம் செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளிலும் செங்குன்றம் பேரூர் கழக பொறுப்பாளர் ஆர்.டி. சுதாகர் தலைமையில் திறந்த வேனில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். அப்போது சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எஸ்.சுதர்சனத்திற்கு செங்குன்றம் பேரூர் கழக பொறுப்பாளர் ஆர்.டி. சுதாகர்,பேரூராட்சி தலைவர்தமிழரசி குமார், துணைத்தலைவர் விப்ரநாராயணன், முன்னாள் துணைத்தலைவர் பாபு, நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி. குமார், பேரூர் கழக நிர்வாகிகள் அருள்தேவநேசன், துணைச் செயலாளர்கள் கபிலன், பொருளாளர் சந்திரசேகர், மாவட்ட பிரதி நிதி சுரேந்தர், ஒன்றிய பிரதிநிதிகள் திராவிடமணி, அன்பு, இளங்கோவன், குமார் உள்ளிட்ட பேரூராட்சி கவுன்சிலர்கள், வார்டு செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஷாம் கார்த்திக், கருப்பு ஸ்ரீதர், முரளி, கிருஷ்ணகுமார், மனிதநேய மக்கள் கட்சி செங்குன்றம் காஜா, பாஷா, அமீன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பட்டாசு வெடித்து பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தினர்.

## தாம்பரம் மாநகர தி.மு.க சார்பில் செயற்க்குழு கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆர் ராஜா கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்



தாம்பரம் மே.25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர தி.மு.க. செயற்க்குழு கூட்டம் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர், மாநகர அவைத் தலைவர் கோ. காமராஜ் அவர்கள் தலைமையில் ஐந்தாவது மண்டல குழு தலைவர் பகுதி கழகச் செயலாளருமான எஸ்.இந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்ற செயற்க்குழு கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, இரா.நரேஷ்கண்ணா, வ.விஜயரங்கன், மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், , வே.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் எஸ்.சேகர், இரா.சுரேஷ், மாநில மருத்துவ அணி துணை செயலாளர் ஆர்.எஸ். கிருத்திகா தேவி, பொதுக்குழு உறுப்பினர் க.தேவேந்திரன், தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகர பாண்டியன், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் ரமணி ஆதிமூலம், எ.மனோகரன், இரா. விஜயகுமார், எஸ்.கார்த்திக், வீ.கார்த்திக், டைகர்சிவா, தி.ச.நடராஜன், மலர்கருணா, கோ.தேனுபுரி, த.பூங்கோதை, இரா. சிவகுமார், கல்யாணி, ஜெ.சத்தியசீலன், டி.கே.கோட்டி, மு.தசரதன், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி,, சி.சுரேஷ், பி.ஜோதிகுமார், ஆர்.தாமோதரன், எல்.பெரியநாயகம், சசிகலாகார்த்திக் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மற்றும் மகளிர் அணி உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## மாதவரம் வடக்கு பகுதியில் மாதவரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனம் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்

மாதவரம், மே 25-

மாதவரம் சட்டமன்ற தொகுதி சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் மாதவரம் வடக்கு பகுதிக்குட்பட்ட 19வது வட்டம் மாத்தூர், 16வது வட்டம் மணலி புதுநகர், சடையங்குப்பம், 17வது வட்டம் வடபெரும்பாக்கம், 23வது வட்டம் புழல் பாலாஜி நகர், விநாயகர் கோவில், 23அ வட்டம் காவாங்கரை ஆகிய பகுதிகளில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் திறந்த வேனில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். அப்போது சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எஸ்.சுதர்சனத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன், வட்ட செயலாளர்கள் கா.தாமரைச் செல்வன், கண்ணப்பன், சந்துரு, குப்பன், மாமன்ற உறுப்பினர்கள் காசிநாதன், ராஜேந்திரன், நந்தினி சண்முகம், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, சிவராமன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பட்டாசு வெடித்து பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாதவரம் வடக்கு பகுதி நிர்வாகிகள், இளைஞரணி, மகளிரணி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் இரு சக்கர வாகனத்தில் ஊர்வலமாகச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

## காவேரிப்பட்டினத்தில் மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டிகாங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர் எல்.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்



கிருஷ்ணகிரி,மே,25-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் மாவட்ட அளவிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. தமிழக முதல்வராக ஜோசப் விஜய் பதவி ஏற்றதை கொண்டாடும் விதமாக இந்த போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காவேரிப்பட்டினம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், போத்தாபுரம், தளிஹள்ளி, நரிமேடு, பையூர், ஜெகதாப், ஹாள்வேஹள்ளி, திம்மாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 28 அணிகள் கலந்து கொண்டன. காவேரிப்பட்டினம் தவெக ஒன்றிய செயலாளர் விஜய்குமார் மற்றும் மாவட்ட மருத்துவமனை அமைப்பாளர் பார்த்திபன் தலைமையில் நடைபெற்ற போட்டியை, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழு உறுப்பினருமான எல்.சுப்பிரமணியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து காவேரிப்பட்டினம், ஜெகதாப், பையூர், ஹாள்வேஹள்ளி உள்ளிட்ட அணிகள் உற்சாகமாக விளையாடி வருகின்றன. மூன்று நாட்கள் நடைபெற உள்ள இந்த போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகளுக்கு பரிசுத்தொகை மற்றும் கேடயங்களை எல்.சுப்பிரமணியன் வழங்கி கௌரவிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டது .இந்நிகழ்ச்சியில் முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் முத்து, முன்னாள் நகர தலைவர் தக்காளி தவமணி, காங்கிரஸ் கட்சியின் விவசாய பிரிவு மாவட்ட தலைவர் ராமச்சந்திரன், கலைப்பிரிவு துணைத்தலைவர் தேவேந்திரன் மற்றும் தவெக நிர்வாகிகள் உதயகுமார், பச்சையப்பா, அப்துல் ரஷீக், அருண்குமார், கே.வி.எஸ். சாந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டம் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புகுறை தீர்க்கும் நாள் கூட்டம் 27.05.2026 அன்று நடைபெறவுள்ளது



தேனி மே 25-

தமிழ்நாடு அரசின் சார்பில், மாற்றுத்திற னாளிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த பல்வேறு சிறப்பு திட்டங்களும், நலத்திட்ட உதவிகளும், மாதந்திர உதவித்தொகைகளும் வழங்கப்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 27.05.2026 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் காலை 10.00 மணி முதல் நடைப்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் மாற்றுத்திற னாளிகள் மற்றும் சங்க நிர்வாகிகள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக் களை அளித்து பயன் பெறலாம். மனு அளிக்க விரும்பும் மாற்றுத்திறனாளிகள் தங்களது மாற்று த்திறனாளி அடையாள அட்டை நகல், ஹிஞ்மிஞ் அட்டை நகல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் புகைப்படம்1 ஆகிய ஆவணங்களுடன் நேரிலோ அல்லது பாதுகாவலர் மூலமாகவோ விண்ண ப்பிக்கலாம்எனவே, மாற்றுத் திறனாளிகளுக்கான இச்சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம் எனமாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.

## மேற்கு வங்க இடைத்தேர்தலில் பாஜக வேட்பாளர் அமோக வெற்றி

கொல்கத்தா:மே 25-

மேற்கு வங்கத்தின் ஃபால்டா சட்டமன்றத் தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில் பாஜக வேட்பாளர் தேபாங்ஷு பாண்டா 1.09 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவின்போது ஃபால்டா தொகுதியில் அதிக அளவில் முறைகேடுகள் நடந்ததாக புகார்கள் எழுந்தன. இதையடுத்து, இந்த தொகுதியில் மறு வாக்குப்பதிவுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது. இதன்படி, மறுவாக்குப்பதிவு இம்மாதம் 21ம் தேதி நடைபெற்றது.

இதில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டன. திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் கோட்டையாகக் கருதப்பட்ட இந்த தொகுதியில், பாஜக வேட்பாளர் தேபாங்ஷு பாண்டா 1.09 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். சிபிஎம் வேட்பாளர் ஷம்புநாத் குர்மி 40,600க்கும் அதிக வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடமும், காங்கிரஸ் வேட்பாளர் அப்துர் ரசாக் மொல்லா மூன்றாம் இடமும் பிடித்துள்ளனர். திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் ஜஹாங்கீர் கான் 7,700க்கும் மேற்பட்ட வாக்குகளுடன் நான்கம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக ஏற்கனவே 207 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ள நிலையில் தற்போது அதன் எண்ணிக்கை 208 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## எபோலா பரவல்: பயணம் செய்யக்கூடாத நாடுகளின் பட்டியலை வெளியிட்டது மத்திய அரசு

புது டெல்லி: மே 25-

எபோலா வைரஸ் பரவலை சர்வதேச பொது சுகாதார அவசரநிலையாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்ததைத் தொடர்ந்து, எபோலாவால் பாதிக்கப்பட்ட காங்கோ, உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு இந்தியர்களுக்கு மத்திய சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "காங்கோ மற்றும் உகாண்டாவில் எபோலா நோய் பரவல் பதிவாகியுள்ளதன் அடிப்படையில், இதனை சர்வதேச பொது சுகாதார அவசரநிலை (PHE-IC) என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், காங்கோ மற்றும் உகாண்டாவில் தற்போது பரவி வரும் எபோலா வைரஸ் நோயின் 'புண்டிபுகியோ' (Bundibugyo) வகைப் பரவலை, ஆப்ரிக்க கண்ட அளவிலான பொது சுகாதார அவசரநிலை (PHECS) என ஆப்பிரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் (Africa CDC) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன.மே 22 அன்று, உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட பரிந்துரைகளின்படி, புண்டிபுகியோ வைரஸ் கண்டறியப்பட்ட பகுதிகளிலிருந்து காய்ச்சல் அறிகுறிகளுடன் வரக்கூடிய பயணிகளைக் கண்டறிந்து, கண்காணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேவேளையில், புண்டிபுகியோ வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்ட பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

எனவே மறு அறிவிப்பு வரும் வரை, காங்கோ, உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு இந்திய அரசு அனைத்து இந்தியர்களுக்கும் அறிவுறுத்துகிறது. தற்போது இந்நாடுகளில் வசித்து வருபவர்கள் மற்றும் இந்நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்பவர்கள், உள்ளூர் அதிகாரிகளால் வெளியிடப்படும் பொது சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறும், கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.மே 21 நிலவரப்படி, காங்கோவில் 746 சந்தேகத்திற்குரிய எபோலா பாதிப்புகளும், அதில் 176 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. இதுவரை காங்கோ மற்றும் உகாண்டாவில் 85 பேருக்கு எபோலா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது; இதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.



## மருத்துவரை தாக்கிய நோயாளி உறவினர்கள் 10 பேர் கைது

பெங்களூரு:மே 25-

கர்நாடக மாநிலம் பீதர் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு மருத்துவர் மச்சிந்த்ரா துக்காராம் (28) அவசர சிகிச்சைப் பிரிவில் பணியில் இருந்தார்.நள்ளிரவு 1 மணியளவில் விஜயா சிங் (47) என்ற நோயாளி, வாகனத்தில் இருந்து கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயங்களுடன் மருத்துவமனைக்கு வந்தார்.அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கவில்லை என கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதில் கோபமடைந்த உறவினர்கள் 10க்கும் மேற்பட்டோர் மருத்துவர் துக்காராமை சரமாரியாக தாக்கினர். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்த போலீஸார் 10 பேரை கைது செய்தனர்.

## கிருஷ்ணகிரியில் கோடைகால சிலம்பம் பயிற்சி முகாம் நிறைவு 125 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கல்



கிருஷ்ணகிரி மே.25-

கிருஷ்ணகிரியில் சிலம்பாலயா சிலம்ப கலைக்கூடம் மற்றும் பாரத் சிலம்பம் சங்கத்தின் கிருஷ்ணகிரி மாவட்ட கிளை சார்பில், பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்காக ஒரு மாத கால கோடைக்கால சிலம்பம் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

இந்த பயிற்சி முகாமில் சுமார் 125 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பான பயிற்சிகளை பெற்றனர். தலைமை பயிற்சியாளர் கௌரி சங்கர் தலைமையில் சிலம்பத்தின் அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன. பயிற்சி முகாம் நிறைவு நாளையொட்டி பல்வேறு சிலம்பப் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.பரிசளிப்பு விழாவிற்கு பாரத் சிலம்பம் சங்கத்தின் மாவட்ட செயலாளர் “நல்லாசிரியர்” பவுன் ராஜ் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் பேசிய அவர், தமிழர்களின் பாரம்பரிய வீரக்கலையாக விளங்கும் சிலம்பம் 5000 ஆண்டுகள் பழமையானது என்றும், அகத்தியர் வடிவமைத்த 64 கலைகளில் சிலம்பமும் ஒன்று என்றும் தெரிவித்தார். மேலும் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் காலத்திலிருந்தே சிலம்பக் கலை போற்றப்பட்டு வளர்க்கப்பட்டதாக கூறினார்.அதேபோல் அரசு கல்லூரிகளில் சேருவதற்கும், அரசு பணிகளில் விளையாட்டு பிரிவின் 3 சதவிகித இடஒதுக்கீட்டில் சிலம்பத்திற்கும் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளதாக விளக்கினார். எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சிலம்பப் பயிற்சியில் ஈடுபடுத்தி பாரம்பரிய கலையை பாதுகாக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.இ நந்நிகழ்ச்சியில் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# பள்ளியில் கூடுதல் கட்டணம்
## சிவகங்கை மதிமுக மாவட்ட செயலாளர் பசும்பொன் மனோகரன் மாவட்ட பள்ளிக் கல்வித்துறைக்கு கண்டனம்

காரைக்குடி மே,25-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் பள்ளியான மகரிஷி மேல்நிலைப் பள்ளியில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விடவும் கூடுதல் கட்டணம் வசூலிக்கப் படுவதாக புகார் எழுந்துள்ள நிலையில் அதை வன்மையாகக் கண்டிக்கும் வகையில் சிவகங்கை மாவட்ட மதிமுக மாவட்டக் கழக செயலாளர் பசும்பொன் மனோகரன் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறைக்கு அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட அதிகமான



கட்டணத்தை மாணவ மாணவியரிடம் தொடர்ந்து வசூல் செய்வதைத் தொடர்ந்து அப்பள்ளியின் உரிமத்தை ரத்து செய்திட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்....அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது. தமிழ் நாட்டின் பள்ளி மாணவர்களின் எதிர்கால நலன் கருதி கட்டணக் கொள்ளை அடாவடித்தனம் செய்யும் காரைக்குடி மாநகர் மகரிஷி தனியார் பள்ளியின் தாளாளரை உடனடியாக கைது செய்ய வேண்டுமெனவும் ...தமிழ்நாடு அரசின் உத்தரவுகளுக்கு கீழ்ப்படியாமலும் பள்ளி மாணவர்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் தொடர்ந்து பணம் பறிக்கும் நோக்கில் மாணவர்கள் மற்றும் பெற்றோரிடம் வசூல் வேட்டை நடத்தி வருகின்ற மகரிஷி தனியார் பள்ளிக்கூடத்தின் உரிமத்தை ரத்து செய்திட வேண்டுமெனவும் சிவகங்கை மதிமுக கோரிக்கை விடுத்துள்ளார்..,

# மானாமதுரை சீனியப்பா திரையரங்கில் காலாவதியான தின்பண்டங்கள் விற்பனை: 17 கிலோ உணவுப் பொருட்கள் பறிமுதல்!

மானாமதுரை மே,25-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் செயல்பட்டு வரும் சீனியப்பா திரையரங்கில் காலாவதியான சிப்ஸ் மற்றும் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மானாமதுரையில் உள்ள சீனியப்பா திரையரங்கில் தற்போது "கருப்பு" திரைப்படம் திரையிடப்பட்டு வருகிறது. நேற்று மதிய காட்சியை காண வழக்கறிஞர் ஒருவர் தனது குடும்பத்தினருடன் திரையரங்கிற்கு






சென்றுள்ளார். இடைவேளையின் போது அங்குள்ள கடையில் தின்பண்டங்கள் வாங்கியபோது, வாங்கிய சிப்ஸ் மற்றும் சில உணவுப் பொருட்கள் காலாவதியானவை என்பதை கவனித்துள்ளார். இதுகுறித்து திரையரங்கு நிர்வாகத்திடம் கேட்டபோது, பொருட்களை மீண்டும் வாங்கி வைத்து பணத்தை மட்டும் திருப்பி வழங்கியதாக கூறப்படுகிறது. மேலும், கேள்வி எழுப்பிய வழக்கறிஞரிடம் அலட்சியமாகவும் முகம் சுளிக்கும் வகையிலும் நடந்து கொண்டதாக தெரிவிக்கப் படுகிறது. இதனால் அதிருப்தியடைந்த வழக்கறிஞர் உடனடியாக உணவு பாதுகாப்புத் துறையினருக்கு தகவல் அளித்தார். சம்பவ இடத்துக்கு வந்த அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டு, சுமார் 17 கிலோ அளவிலான காலாவதியான சிப்ஸ் மற்றும் உணவுப் பொருட்களை பறிமுதல் செய்து அழித்தனர்.மேலும், காலாவதியான தின்பண்டங்களை விற்பனை செய்ததற்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளதாக உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# "ஈரான் விவகாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது" அமெரிக்க அமைச்சர் தகவல்

புது டெல்லி:மே,25-

ஈரானுடனான பேச்சுவார்த்தை முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்தார். மேலும், ஈரானுடனான ஒப்பந்தம் குறித்து இன்று பிற்பகல் அறிவிப்பு வெளியாக வாய்ப்புள்ளதாக அவர் கூறினார்.புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, "ஈரான் விவகாரம் குறித்து அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இன்று பிற்பகல் சில அறிவிப்புகளை வெளியிடக்கூடும். நமக்கு நீண்டகால பலனளிக்கக் கூடிய ஒரு வரைவுத் திட்டத்தில் நாங்கள் சில முன்னேற்றங்களை அடைந்துள்ளதாக நினைக்கிறோம். இந்த விவகாரத்தில் இறுதி முன்னேற்றம் ஏற்படவில்லை என்றாலும், குறிப்பிடத்தக்க



முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் ஈரானின் முழுமையான ஏற்பும், இணக்கமும் தேவைப்படும். அடுத்த சில மணி நேரங்களில், உலகிற்கு சில நல்ல செய்திகள் கிடைக்க வாய்ப்புள்ளது. ஈரானிடம் ஒருபோதும் அணு ஆயுதம் இருக்க கூடாது என்பதே எங்களின் இறுதி இலக்கு என்பதை நான் அனைவருக்கும் நினைவூட்டுகிறேன்.

ஹார்முஸ் ஜலசந்தி ஒரு சர்வதேச நீர்வழியாகும். ஆனால், சர்வதேச சட்டங்களை மீறி சர்வதேச நீர்வழியைப் பயன்படுத்தும் வர்த்தகக் கப்பல்களை அழித்துவிடுவோம் என்று அவர்கள் அச்சுறுத்துகிறார்கள். வளைகுடாவில் உள்ள எங்கள் நட்பு நாடுகளுடன் இணைந்து கடந்த 48 மணி நேரத்தில் ஒரு செயல்திட்டத்தை உருவாக்குவதில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.அது வெற்றி பெற்றால், இறுதியில் நமக்கு முற்றிலும் திறந்த ஹார்முஸ் ஜலசந்தியும், சுங்கக் கட்டணங்கள் இல்லாத ஹார்முஸ் ஜலசந்தியையும் கிடைக்கும். ஈரானிய அணு ஆயுத அச்சுறுத்தலை உலகம் இனி எதிர்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்வதே எங்கள் இறுதி இலக்காக உள்ளது" என்றார்.முன்னதாக, புது டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்தித்து ரூபியோ பேச்சுவார்த்தை நடத்தினார்.



# சோனியா, ராகுலுடன் கேரள முதல்வர் சந்திப்பு

புதுடெல்லி::மே,25-

கேரள முதல்வராக பதவியேற்ற பிறகு வி.டி.சதீசன் முதல் முறையாக டெல்லி சென்று சோனியா காந்தி, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட காங்கிரஸ் மூத்த தலைவர்களை சந்தித்து பேசினார்.

கேரளாவில் சமீபத்தில் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வெற்றி பெற்று 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது. முதல்வராக வி.டி.சதீசன் கடந்த 18ம் தேதி பதவியேற்றார்.

இந்நிலையில் முதல்வராக பதவியேற்ற பிறகு முதல் முறையாக வி.டி.சதீசன் நேற்று முன்தினம் இரவு டெல்லி வந்தார். அவர் நள்ளிரவில் டெல்லி வந்தாலும் காங்கிரஸ் தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஏராளமானோர் டெல்லியில் உள்ள கேரளா இல்லத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வி.டி.சதீசன் நேற்று சோனியா காந்தி, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே. கே.சி.வேணுகோபால், பிரியங்கா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் மூத்த தலைவர்களை சந்தித்துப் பேசினார்.

கேரள சட்டப்பேரவை தேர்தலில் தனக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்த மேலிடத் தலைவர்களுக்கு சதீசன் நன்றி தெரிவித்துக் கொண்டார். மேலும் இந்த சந்திப்பில் கட்சியின் அமைப்பு ரீதியான விஷயங்கள் மற்றும் புதிய கேரள அரசின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கேரளாவில் கட்சிக்கு புதிய மாநிலத் தலைவரை நியமிப்பது குறித்து காங்கிரஸ் கட்சிக்குள் ஆலோசனைகள் நடந்து வரும் வேளையில் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. சதீசன் வரும் வாரத்தில் பிரதமர் மோடியை சந்திக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

# வேலை வாய்ப்பை வலியுறுத்தி மதுரையில் 'காக்ரோச்' இயக்க இளைஞர்கள் பேரணி

மதுரை:மே,25-

இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு, ஊழல் எதிர்ப்பு கோரிக்கைகளை வலியுறுத்தி 'காக்ரோச்' என்ற இளைஞர்களின் இயக்க பேரணி மதுரையில் நடந்தது.வேலையின்மை, போட்டித் தேர்வுகளில் நடக்கும் முறைகேடு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளை எதிர்த்து கரப்பான் பூச்சி (காக்ரோச் ) என்ற பெயரில் இளைஞர்கள் முன்னெடுத்துள்ள இயக்க பேரணி மதுரையில் இன்று நடந்தது. காந்தி மியூசியத்தில் இருந்து தமுக்கம் மைதானம் வரை இப்பேரணி நடந்தது. இதில் ஏராளமான இளைஞர்கள், பெண்கள் பங்கேற்றனர். ஊழலை எதிர்த்தும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் போன்ற கோரிக்கையை வலியுறுத்தினர்.'காக்ரோச்' இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வா பேசியது; சமீபத்தில் நீதிபதி ஒருவர், இளைஞர்கள் கரப்பான்




பூச்சி, ஒட்டுண்ணி போல தொந்தரவு செய்கின்றனர் என கருத்து தெரிவித்திருந்தார். இதைத்தொடர்ந்து வேலையின்மை, வாழ்வாதார சிக்கல்களில் சிக்கி தவிக்கும் இளைஞர்கள் தங்களை 'கரப்பான் பூச்சி' என அடையாளப்படுத்திக் கொண்டு நாடு முழுவதும் ஒன்றிணைகின்றனர். இந்த இயக்கத்துடன் தொடர்புடைய சமூக வலைதள பக்கங்கள் முடக்கப்பட்டுள்ளன. இந்த இயக்கத்தை ஒடுக்க முயற்சிப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது.நீட்தேர்வு வினாத்தாள் கசிவு, மத்திய அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளில் முறைகேடு போன்றவை இளைஞர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்துகிறது. நீட் தேர்வு ஏழை மாணவர்களின் மருத்துவக் கனவை எட்டாக்கனியாக்கிறது. 2014ல் ஆட்சிக்கு வந்தபோது, ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குவோம் என, மத்திய அரசு உறுதியளித்தது. இதுவரை அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இந்திய இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு கூறினார்.

# நீட் தேர்வு விண்ணப்ப தொகை திரும்பப் பெற வங்கிக் கணக்குகளை மே 27 வரை பதிவேற்றலாம்

புதுடெல்லி: மே,25-

நீட் தேர்வு விண்ணப்பத் தொகையைத் திரும்பப் பெற தேர்வர்கள் தங்களது வங்கி விவரங்களை மே 27 வரை பதிவேற்றலாம் என்று தேசிய தேர்வு முகமை (என்டிஏ) அறிவித்துள்ளது.நீட் தேர்வு வினாத்தாள் கசிவு காரணமாக இந்த மாதம் 3ம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து புதிய தேர்வு வரும் ஜூன் 21ம் தேதி நடைபெறும் என்று என்டிஏ அறிவித்துள்ளது.

இந்நிலையில் 2026 நீட் தேர்வர்களுக்காக ஒரு



புதிய இணையதளத்தை நேற்று முன்தினம் என்டிஏ தொடங்கியுள்ளது. தேர்வர்கள் தங்களது தேர்வு விண்ணப்பத் தொகையைத் திரும்பப் பெறுவதற்காக அந்த இணையதளத்தை அணுகி தங்களது வங்கி விவரங்களை வரும் 27ம் தேதி வரை பதிவேற்றலாம்.

வரும் 27ம் தேதி இரவு 11.50 மணி வரை தேர்வர்கள் தங்களது வங்கி விவரங்களை பதிவேற்ற முடியும். அந்த இணையதளத்தில் தேர்வர்களின் பெயர் விவரம், வங்கியின் பெயர், வங்கிக் கணக்கு எண், ஐஎஃப்எஸ்சி கோட், ரத்து செய்யப்பட்ட வங்கிக் காசோலை (ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) ஆகியவற்றை அதில் பதிவு செய்ய வேண்டும்.

வரும் 27ம் தேதி இரவு 11.50 மணி வரை பதிவேற்றப்படும் தகவல்களே இறுதியானவை என்று என்டிஏ அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# 12ம் வகுப்பு மாணவர்களின் மறுமதிப்பீடு கட்டண வசூல் குளறுபடி குறித்து சிபிஎஸ்இ விளக்கம்

டெல்லி:மே 25-

சிபிஎஸ்இ 12ம் வகுப்பு மாணவர்களின் விடைத்தாள் மறுமதிப்பீடு கட்டண வசூலில் குளறுபடி என புகார் எழுந்ததையடுத்து சிபிஎஸ்இ விளக்கமளித்துள்ளது. மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பித்த மாணவர்களிடம் பெறப்பட்ட கூடுதல் கட்டணம் திருப்பி தரப்படும். குறைவாக காட்டிய கட்டணத்தை செலுத்திய மாணவர்கள் எஞ்சிய தொகையை செலுத்த அறிவுறுத்தல். பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் நிவாரணம் தரப்படும்' என சிபிஎஸ்இ உறுதியளித்துள்ளது

# கோவை, திருச்சி உள்ளிட்ட 18 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை:மே,25-

தமிழகத்தில் கோவை, திருச்சி உள்ளிட்ட 18 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 3.1 கிமீ முதல் 5.8 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (மே 25) முதல் மே 30ம் தேதி வரை ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் நாளை நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், கரூர், திண்டுக்கல், தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.



26ம் தேதி கோவை, திருப்பூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் மே 28ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 3 டிகிரி ஃபாரன்ஹீட் வரை விட குறைவாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தென் தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 27ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் 6 செமீ, கோவை மாவட்டம் சின்னக்கல்லார், திருப்பூர் மாவட்டம் வட்டமலை நீர்த்தேக்கம், மதுரையில் தலா 3 செமீ, திருப்பூர் மாவட்டம் அவினாசியில் 2 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தேவகோட்டை தனியார் மஹாலில் மாற்று கட்சிகளிலிருந்து விலகி தவெகவில் இணைந்தனர்!

தேவகோட்டை மே,25-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில், மாற்றுக்கட்சிகளிலிருந்து விலகி ஏராளமான மாற்று கட்சி நிர்வாகிகள் மற்றும் பலர் முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்ட நிகழ்வு அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேவகோட்டை தனியார் மஹாலில் நடை பெற்ற நிகழ்வில் திமுக பிரமுகரும், வழக்கறிஞருமான ஆசைத்தம்பி தலைமையில் இந்த இணைவு விழா நடைபெற்றது. தமிழக





வெற்றிக் கழகத்தின் மாவட்ட கழக செயலாளரும் கனிமவள மற்றும் சுங்கத்துறை அமைச்சர் டாக்டர் T.K. பிரபு முன்னிலையில்,பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றிக் கழகத்தின் உறுதி மொழியினை கூறி கட்சியில் இணைத்துக் கொண்டனர்.வழக்கறிஞர் லட்சுமணன் திமுக மாவட்ட வழக்கறிஞர் துணை அமைப்பாளர்வழக்கறிஞர் ரம்யா திமுக ஒன்றிய துணை அமைப்பாளர்சூர்யா பிஜேபி மாவட்ட இளைஞரணி செயலாளர்வழக்கறிஞர் ராஜசேகர்ராஜேந்திரன் (TMT பஸ் டிரான்ஸ்போர்ட்) உள்ளிட்ட பலர் இணைந்தனர்.புதிதாக கட்சியில் இணைந்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு டாக்டர் T.K. பிரபு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பிரபு அனைவருக்கும் கட்சியின் அடையாளமான துண்டு அணிவித்து, தமிழக வெற்றிக் கழகத்திற்கு அன்புடன் வரவேற்றார்.தேவகோட்டை பகுதியில் எதிர்க்கட்சியான திமுக மற்றும் தேசிய கட்சியான பிஜேபி மற்றும் பல்வேறு கட்சியிலிருந்து விலகி நிர்வாகிகள் தவெகவில் இணைந்திருப்பது, அடுத்து வரும் தேர்தல்களில் அந்தப் பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் செல்வாக்கை உயர்த்தும் ஒரு முக்கிய நகர்வாகப் பார்க்கப்படுகிறது..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161